# Athithi Devo Bhava

**By c P Hariharan**

யாராவது வீட்டு அழைப்பு மணியை அழுத்தினால், ஓர் சிலர் அதை கவுனிக்க அலட்சியமாக இருந்து விடுகிறார்கள் ஓர் சிலர் ஒரு இருபது நிமிடத்துக்கு அப்புறம் கொஞ்சம் மனம் இரங்கி, அவங்க வேலைகளை எல்லாம் முடித்த பின் யார் வாசலில் நிற்கிறார்கள் என்று பார்கிறார்கள். இன்னும் சிலர் பாதி மனசோடு கதவை லேசாக திறந்து அவங்களை தொதரவு பண்ணினதாக நினைத்து, வார்த்தகளை பரபரப்பாக அள்ளி கொட்டி விடுகிறார்கள். ஒரு சிலர் டோர் லென்ஸ் மூலமாக பார்த்துவிட்டு அவன் கெடக்கறான் களவாணிப் பயல் என்று நினைத்து, அவரை

தவிக்கவிட்டு வேடிக்கை பார்கிறாங்க பிறகு அவங்க தன் வேலையை திரும்பவும் தொடர்கிறார்கள். இவர்களுக்கு அடுத்தவர் மீது ஆர்வமோ, அக்கரையோ இருப்பதில்லை.இன்னும் சிலர், அவர் யாரை பார்க்க வந்திருகிரார்களோ, அவர் வீட்டில் இருந்தும் இல்லை என்று கூறி விடுகிறார்கள்.

ஒரு சிலர் வந்தவர்கள் யாராக இருந்தாலும் முகத்துக்கு நேரடியாகவே கதவை சாத்தி விடுகிறார்கள். அவங்க திரும்பவும் அந்த நபர் தன் வீட்டுக்கு வரணம்னு நினைப்பதேயில்லை. ஒரு விருந்தினரை பொறுமையாக யாரும் வரவேற்ப்பதில்லை சரியான நேரத்தில் சரியான முறையில் விருந்தினர்களை வரவேர்கிறவர்கள் அதிராக தென்படுகிறது

ஒரு சிலர், அடுத்தவங்கவீட்டு அழைப்பு மணியை அழுத்தினாலும்

சந்தேகமாகத்தான் பார்கிறாங்க. ஒரு வேளை அவங்க முக்யமான வேலைக்காக

வந்தவற்களா க்கூட இருக்கலாம்.

ஒரு பிச்சைக்காரனுக்கு நாம் பிச்சை போடாமல் இருக்கலாம். ஆனால்

அடுத்தவங்களையும் பிச்சை கொடுக்ககூடாது என்று சொல்ல

நமக்கு எந்தஉரிமையும் கிடையாது. அற்கதை உள்ளவங்களை உதவுறதில தப்புத் தவர் எதுவும் கிடையாது.

ஒரு சிலர் விருந்தினர்களை உடனடியாக விசாரிப்பதை கௌரவக்குறைவாக நினைகிறாற்கள். இன்னும் சிலர் நண்பர்கள், உறவுகாறங்க

வீட்டுக்கு செல்வதையே, தங்கள் தகுதிக்கி தர குறைவாகத்த்தான் நினைகிறார்கள்.

மிகவும் அவசியம் என்றாலே, நாம் ஒரு நபர் வீட்ட்க்கு செல்கிறோம்.

எப்பவுமே, ஒரு போன் போட்டுட்டு போவதுதான் மரியாதைக்குரியது.

அவங்க, வீட்டில் இருக்கிறதை உறுதி படுத்தவும், அவங்க வசதியை

தெளிவு படுத்தவும் இது உதவுகிறது.ஆனாலும் கொடுத்த வாக்கை

காட்பாத்துகிற நிலையில், மரியாதை, பொறுப்பு ஆகியவை நம் நிகண்டுவிலேயே இல்லாமல் போய்விட்டது.

விருந்தினர்கள் கடவுளாக கருதப்படுவதால் அவங்களுக்குரிய மதிப்பை

தர வேண்டும். விருந்தினர்களை சரியான முறையில் உபசரிக்கவில்லை என்றால் பிறகு வருந்த வேண்டியிருக்கும்.

'ஒரு பெண்ணின் கணவர் ஒரு விபத்தில் இரந்துவிட்டார். இந்த

தகவலை சொல்ல ஒரு நபர் அவங்க வீட்டுக்கு போனார்'.

ஆனால் பல தடவை அழைப்புமணியை அழுத்தியும் யாரும் கதவை

திரக்க முயலவே இல்லை. அவங்க டி வி க் குள்ளையே நுழைன்திருந்தார்கள்.

அவங்க வீட்டு மர சாமானங்களை நகர்த்த நேரம் வந்து விட்டது

என்று அவங்க கற்பனையில்க்கூட நினைக்கவில்லை.

அடுத்த நிமிடம் என்ன நிகழ்ழ இருக்கிறது என்பது நமக்கு தெரிவதில்லை

அதனாலேயே விருந்தினரை முறைப்படி கவுநிக்கவேண்டிய பொறுப்பு

நமக்கு இருக்கு.

ஒரு விருந்தாளி வந்தாலே,அவங்க எவ்ளவ் மூட்டை முடிச்சுகள் கொண்டுவந்திருக்காங்க என்பது தான் நம் கவுனத்தில் மொதல்ல இருக்கிறது. அதை வெச்சு, அவங்க எவ்ளவ் நாள் தனங்க போகிறாங்க என்பதையும் நாம் தயக்கமின்றி எடை போடுகிறோம்.

அவங்களை, ஒரு வழிக்கி, வழி அனுப்புற வரலும் எவ்ளவ் செலவு ஆகும்

என்பதையும் முன்கணிக்கிறோம். ஓயாத அலையாய் அலை பாய்கிறோம்,

பதட்டப்படுகிறோம். அவர்கள் நம்மை சுரண்டுகிற நோக்கதுதுடந்தான்

வந்திருக்கிறார்களோ என்ற சந்தேகமும் இயங்குகிறது.

ஒரு சிலர் இடம் கொடுத்தால் மடம் பிடுங்கத் தான் சைய்கிறாங்க. அதனால்

சூழ்நிலைகளை தங்களுக்கு சாதகமாக பயன்ப்படுத்தி கொள்வார்களோ

என்ற அரசல் புரசலான பயம் மனதில்பொங்குகிறது. ஒரு நாலைந்து நாள் தங்க முயன்றாலே போதும், ஏதோ ஒரு மாதம் தங்கி விட்டார் போன்ற பின்னிடுவாங்க. அவங்க நிறைய நாட்கள் தங்கி விடுவார்களோ, பெவிகோல் போன்ற ஒட்டிகொள்வாங்களோ என்ற பயம் மனதில் எழுகிறது. அப்படியே அவர்கள், தப்பித் தவறி தங்கி விட்டாலும், ஈரை பேனாக்கி, பேனை பெருமாளாக்கி விடவும் தயங்கமாட்டார்கள். அவங்க நாங்கு சுவர்குள்ளேயே தன்னம்த் தனிமையில்த்தான் வாழ விரும்புகிறார்கள் என்பதை நாம் உணர வேண்டும். நாம் அவங்களை புரிந்துகொண்டு விலகி நிற்பதே மேல். அன்பும்

ஆதரவும், மதிப்பும் இல்லாத இடங்களில் சுவர்ண மழை பொழிந்தாலும் காலை மிதிக்க கூடாது என்பது ஸ்ரீ துளசி தாஸ் அவர்களின் கருத்து. நாம் இருக்கும்போது மகிழாதவங்களை விலகி நின்று

மகிழ்விக்கணம். நாம் இருக்கிறதை விட இல்லாதபோது தான் அடுத்தவங்க மனதில்மென்மையாக இடம் பிடிக்கிறோம்.

நமக்கு விருந்தினர்களை முழு மனதோட கவுனிக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் இருக்கு. அவங்களை வறுமையான மன நோக்கத்தில் கவுநிப்பதில்

எந்த பயனும் இல்லை. நாம் விருந்தினர்களை சரியாக கவுநித்தால் மட்டுமே

நாமும் விருந்தினர்களாக செல்ல முடியும்.

சகிப்புத்தன்மை இருக்கிறவங்களை மட்டும் தான் இரைவனும் சகித்துகொள்கிறார்.

முன்னொருகாலத்தில் சமூக தொடர்ப்பின் அதிர்வெண் சகஜமாக

இருந்தன. அது ஒரு வழக்கமாகத்தான் கருதப்பட்டிருந்தன .

பணம் காசை விட மனிதநேயத்துக்குத்தான் முக்யத்துவம் இருந்தன. ஆனால் இன்று மனிதநேயம் முற்றிலும் மலையேறிவிட்டது.

இன்று காசே தான் கடவுளப்பா, அது கடவுளுக்கும் தெரியுமப்பா என்ற கணக்கீடு தான் வாழ்கிறது. சொந்த பந்தங்களுக்கு இடையில் பணம் ஒரு சுவர் போன்ற இடைஞ்சலாகத்தான் இருக்கிறது.

முன்னோர்கள் கொடைபன்புள்ளவராக இருந்தார்கள்.. இன்று

மனிதாபிமானம் அதிராகத் தான் காணபடுகிறது. இன்று

பணம் சம்பாதிப்பது என்பது பிரம்ம பிரயத்தினம் ஆகி விட்டது. அதனால்

வரவுக்கு செலவு இருக்கட்டும் என்று சொல்லி அவ்ளவ் சுலபமாக

எடைபோட முடியாது.

ஒரு நபருக்கு, ஒரு சின்ன வீடு இருந்தது. அங்கேயே பக்கவாட்டில் நிறைய இடம் இருந்ததால் இரண்டு வீடுகளை கூட கெட்டி விரிவாக்கம் செய்துகொண்டார். சுயநலமாக இருக்கிறவங்க அடுத்தவங்களுக்கு பார்கிங்க்கு இடம் இருக்கா இல்லையா என்பதையெல்லாம் யோசிப்பதேயில்லை.அவர் வீட்டு எல்லா

அறைகளிலும் குளிர் சாதனத்தை போட்டு கொண்டார். வெளியில் இருந்து, காற்றோ, வெளிச்சமோ வர கூட வாய்ப்பே இல்லாமல் பண்ணிட்டார். இது போன்ற மனபான்மையுள்ளவங்க அடுத்தவங்களை கண்டுகறதில்லை.

சொல்ல போனால் நாம நினைக்கிறது எதுவும் நடக்கிறதே இல்லை என்றாலும் நாம் வாழ்க்கையில் கணக்கு வழக்குகளை போடாமல் இருப்பதும்

இல்லை. நாம் நினைத்ததெல்லாம் நடந்துவிட்டால் தைவம் எதுவும் இல்லை

நமக்கு நாலு நபர்களிடம் எப்பவுமே ஒத்துணர்வு இருக்கவேண்டியது அவசியம். அதுவும் நாம்பெருத்திருந்தால் எட்டு நபர்களிடமாவது ஒத்துணர்வு

இருக்க வேண்டியது மிகவும் அவசியம்'

நாம் இரந்த பிறகு கொஞ்சம் நபர்கள் சுடலைவரலும் வரவேண்டும் என்றால் நிறைய நபர்களிடம் ஒத்துணர்வு தேவை.

இந்த உலகில் நாம் எல்லோருமே விருந்தினர்கள் தான் என்பதை நாம் எப்பவுமே உணரவேண்டும். இன்று இல்லை என்றால் நாளை ஓர் நாள் நாம் இந்த உலகத்தை விட்டு போய்த்தான் ஆகணம். இது கொஞ்சம் தத்வுமாக தோன்றினாலும்' அதுதான் உண்மை.

அதனால நாம் அவநம்பிக்கையாக இருக்க வேண்டியதில்லை.வேலியை நம்பி பெயிற் இருப்பது போன்ற நம்பிக்கை தான் வாழ்க்கை.

நம் நடத்தை கொடீரமாக இருந்தால், பிறகு தன்னம்த் தனிமையில் தவிக்க வேண்டிய சூழ்நிலை நேரும்'. நம் மனசாட்சியே தனிமையில் நம்மை கொல்லும். மனசாட்சி மறந்தவர் யாரும் உலகில் நிலைப்பதில்லை.சின்னஞ்சிரு விஷயங்களுக்கே முரட்டுத்தனமாக நடந்துகிறது சுலபம். நாம் பின்னாடி வருத்தப்படவேண்டிய சூழ்நிலைகளை

சந்திக்க வேண்டியதாக இருக்கும் நமக்கு அவசரத்துக்கு உதவ மத்தவங்க தயங்கத்தான் செய்வாங்க. அதனால் மனதில் உறுதி வேண்டும் வார்த்தையிலே தெளிவும் வேண்டும்.வாய் விட்டு சொல்லும் வார்த்தைகளை திருப்பி எடுக்க

முடியாது. அதே போன்ற ஏற்கனவே அனுப்பபட்ட மின்னஞ்சலை திரும்பவும் சீர் சைய்ய இயலாது.

நாம் சுயநலமாகவும், பொருள்முதல்வாதி களாகவும்தான் இருக்கிறோம்.

நாம் ஒத்து ணர்வோடு இருந்தால் அவசரத்துக்கு நாலு பேர் இருப்பாங்க.

நாங்கு நண்பர்கள் இருந்தால் நம் ஞானமும் உற்சாகமும்

உல்லாசமும் பெருகிறது. ஒருவருக்கொருவராக வாழ்வதால், வாழ்வின் துன்பத்துயரங்களை எளிதில் சந்திக்க முடிகிறது. எல்லா பிரச்சனைகளுக்கும் ஒரு தீர்வு கிடைக்கிறது.

குறை ஒன்றும் இல்லாதவர்கள் இந்த உலகில் யாருமே கிடையாது. அதனால்அடுத்தவங்களை குறை கூறாமல் இருப்பது, குறை ஒன்றும் இல்லை மறை மூர்த்தி கண்ணா' என்று பாடுவதை விட மேலானது.

மனிதநேயம் மாதவ சேவையாக கருதப்படுகிறது.

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. அதனால் விருந்தினர்களை மதிக்காவிட்டாலும் குறைந்தபட்சமாக மிதிக்காமல் இருப்பது

மேலாகும்.